பக்கங்கள் 12

விலை ரூ. 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 38
கதிர் : 191

திங்கட்கிழமை 05 ஜூன் 2023

வைகாசி 22 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## மஹிந்தவின் வீடு கோத்தா வசம்

கொழும்பு, ஜூன் 5
முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அரசாங்கம் ஸ்டன்மோர் கிரெசன்டில் உள்ள வீடொன்றை வழங்கியுள்ளது. மஹிந்த ராஜபக்ச முன்னர் வசித்த வீட்டையே அரசாங்கம் கோத்தாபயவுக்கு வழங்கியுள்ளது.
கோத்தாபய மலலசேகர மாவத்தையில் உள்ளவீட்டில்வசித்து வந்த நிலையிலேயே தற்போது »11

## பாண் விலை குறைப்பு

கொழும்பு, ஜூன் 5
450 கிராம் எடையுடைய பாணின் விலை 10 ரூபாவால் நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ஓ-இ)

# பாதுகாப்புப் படைகளை பலப்படுத்தும் ரணில்



### கூட்டுப்படைகளின் தளபதிக்கு கூடுதல் அதிகாரம் வழங்கவும் திட்டம்

**கொழும்பு, ஜீன் 5**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முப்படையினரையும் பலப்படுத்துவதுடன் கூட்டுப்படைகளின் தளபதிக்கு மேலும் அதிகாரங்களை வழங்கும் வகையிலும் நகர்வுகளை முன்னெடுத்துள்ளார்.** »11

## பயங்கரவாதத்துக்கு நிதியுதவி தடுக்கும் செயற்பாடு ஆரம்பம்

### ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 5
சட்டவிரோத பணப்பரிமாற்றம் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியுதவிகளை வழங்குவதைத் தடுப்பதற்கான அடுத்தகட்டச் செயற்பாடுகளை இலங்கை விரைவில் ஆரம்பிக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.
மேற்படி செயற்பாடுகள் நாட்டின் »11

### மோதலின் எதிரொலி -

## பல்கலைக்கழக மாணவர்கள் 31 பேருக்கு வகுப்புத் தடை

யாழ்ப்பாணம், ஜூன் 5
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் மாணவர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவங்கள் தொடர்பில் 31 மாணவர்களுக்கு உள்நுழைவுத் தடை »11

## தேர்தலைப் பிற்போடுவதை ஒருபோதும் ஏற்கமுடியாது

### விமல் வீரவன்ஸ



கொழும்பு, ஜூன் 5
தேர்தல் மீது மக்களுக்கு அக்கறையில்லை என்று கூறிவிட்டு தேர்தலைப் பிற்போடுவது அப்பட்டமான ஜனநாயக மீறல் - இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.
'பொதுமக்களில் பெரும்பாலானோருக்கு தேர்தல் அரசியல் மீது தற்போது நம்பிக்கையில்லை' »11



## மொட்டுவின் தயவில்தான் அரசாங்கம் இயங்குகிறது

### அமைச்சுப் பதவிக்காக காலில் விழவில்லை என்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல்

கொழும்பு, ஜூன் 5
மொட்டுக் கட்சியால் தான் இந்த அரசாங்கம் இயங்கு நிலையிலுள்ளது. எனவே மொட்டுக் கட்சியினரைப் புறக்கணித்து இந்த அரசால் எதனையும் செய்யமுடியாது - இவ்வாறு சிறிலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் »11

## கஜேந்திரகுமாருக்கு அச்சுறுத்தல்; நீதிமன்றத்தில் இன்று அறிக்கை

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தகவல்

கொழும்பு, ஜூன் 5
வடமராட்சி கிழக்கு, மருதங்கேணியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்து கொண்ட கூட்டத்தில் அரச புலனாய்வாளர்களால் அவர் தாக்கப்பட்டமை மற்றும் பொலிஸாரால் துப்பாக்கியைக் காண்பித்து அச்சுறுத்தப்பட்டமை தொடர்பில் நீதிமன்றத்தில் இன்று அறிக்கை சமர்ப்பிக் »11

# தன்னைப் பிரசவித்த மனிதனையே சாகடிக்கத் துடிக்கிறது பிளாஸ்ரிக்!

### இன்றைய உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 5
ஒருநாள் பயன்படுத்தித் தூக்கி வீசும் பிளாஸ்ரிக்குக்கு மாற்றாகக் கடதாசி, துணி, இலைகள் போன்றவற்றினாலான பொருள்களுக்குத் தாமதமின்றித் திரும்ப வேண்டும். இல்லையேல் அதனைப் பிரசவித்த மனுக்குலத்தையே விரைவில் தின்று செரித்து விடும் என்று எச்சரித்துள்ளார் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

250 மில். டொலர் செலவில்

# 'பில் கேட்ஸ்' குழுமம் இலங்கையில் முதலீடு

கொழும்பு, ஜூன் 5

**250 மில்லியன் டொலர் முதலீட்டில் இலங்கையில் விவசாயத்துறையை தொழில்நுட்பமயமாக்குதல், சமூகப் பாதுகாப்பு, நிதிக் கட்டமைப்பு மற்றும் காலநிலை மாற்றம் போன்ற துறைகளை உள்ளடக்கிய திட்டத்தை முன்னெடுக்க பில் கேட்ஸ் நற்பணி மன்றம் முன்வந்துள்ளது. இதற்காக விசேட மென்பொருள் ஒன்றை உருவாக்கவும் மைக்ரோ சொப்ட் நிறுவனம் தீர்மானித்துள்ளது.**

இலங்கையின் விவசாயத்துறையை மேம்படுத்தவும் நவீனமயமாக்கவும் மைக்ரோ சொப்ட் நிறுவனத்தின் ஸ்தாபகத் தலைவர் பில் கேட்ஸின் நற்பணி மன்றம் முன்வந்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த பில் கேட்ஸ் நற்பணி மன்றத்தின் பிரதிநிதிகள் இலங்கையின் விவசாயத்துறைக்கு தொழில்நுட்ப ஒத்துழைப்புகளை வழங்குவது குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

விவசாயத்துறை மற்றும் அதன் உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்தல், போஷாக்குத் தன்மையை அதிகரித்தல் போன்ற விடயங்களில் நவீன தொழில்நுட்பத்தை உட்புகுத்தலுக்கு தேவைக்கமைய, மென்பொருளை அறிமுகம் செய்யவும் பில் கேட்ஸ் மன்றம் தீர்மானித்துள்ளது. இதற்கமைவான ஆரம்பக்கட்ட பேச்சுக்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் முன்னெடுத்திருந்தனர். இந்தத் திட்டமானது 250 மில்லியன் டொலரில் முன்னெடுக்கப்படவுள்ளது. விவசாயத்துறையின் தகவல் சேகரிப்பு, அரிசி மற்றும் ஏனைய விவசாய உற்பத்திகளின் போஷாக்குத் தன்மையை அதிகரித்தல் என்பன இந்தத்திட்டத்தின் நோக்கமாக உள்ளது.

அதேபோன்று சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை தொழில்நுட்பமயமாக்குவதற்கும் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இலங்கைக்காக உருவாக்கப்படும் மைக்ரோசொப்டின் மென்பொருள்கள் விவசாயம், சமூகப் பாதுகாப்பு, நிதிக் கட்டமைப்பு மற்றும் காலநிலை மாற்றம் போன்ற துறைகளை உள்ளடக்கியது என பில் கேட்ஸ் நற்பணி மன்றம் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தை ஜனாதிபதி அலுவலகம் ஊடாக முன்னெடுக்க பில் கேட்ஸ் நற்பணி மன்றம் கேட்டுக் கொண்டுள்ள நிலையில், அதற்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். (ம-இ)

## 175 வீதத்தால் அதிகரித்த சுற்றுலாவிகளின் வருகை

கொழும்பு, ஜூன் 5

இந்த ஆண்டின் முதல் 5 மாதங்களில், 5 இலட்சத்து 24 ஆயிரத்து 486 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் பிரவேசித்துள்ளனர்.

கடந்த மே மாதத்தில் மட்டும், 83 ஆயிரத்து 309 சுற்றுலாவிகள் வந்துள்ளனர். கடந்த ஆண்டு மே மாதம், 30 ஆயிரத்து 207 சுற்றுலாவிகளே நாட்டுக்கு வந்துள்ளனர். இந்த ஆண்டில், அதேகாலப் பகுதியில் நாட்டுக்குள் வந்த வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை 175.8 சதவீதத்தால் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## வற்றாப்பளை அம்மனுக்கு இன்று விசாகப் பொங்கல்

2,000 பொலிஸார் கடமையில்



முல்லைத்தீவு, ஜூன் 5

வற்றாப்பளை கண்ணகி அம்மனின் வருடாந்த வைகாசி விசாகப் பொங்கல் உற்சவம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த உற்சவத்தில் பல்லாயிரம் பக்கர்கள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அடியார்களின் பாதுகாப்புக்காக 2 ஆயிரத்தும் மேற்பட்ட பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ய-113)

## 10 முதல் 24 வயதுடையோரில் 39 வீதத்தினருக்கு மனநோய்!

கொழும்பு, ஜூன் 5

இலங்கையில் 10 முதல் 24 வயதுடையவர்களில் 39 சதவீதத்தினர் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஆய்வு ஒன்று கூறுகிறது.

பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் களனிப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த குழு ஒன்று 20 வருட காலப்பகுதியில் 52 ஆயிரம் இலங்கையர்கள் உட்பட 33 ஆய்வுகளை மதிப்பீடு செய்து இந்த விவரங்களை வெளியிட்டுள்ளது. இந்த ஆய்வு முடிவின்படி, இலங்கையில் உள்ள மன நலப் பிரச்சினையின் அளவை எடுத்துக்காட்டும் ஆபத்தான புள்ளி விவரங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. (எ-இ)

## வடக்குக் கடற்பரப்பில் காற்று வேகமெடுக்கும்

கொழும்பு, ஜூன் 5

வடக்குக் கடற்பரப்பில் காற்று வேகமாயிருக்கும் என்றும், மணிக்கு 50 கிலோமீற்றர் தொடக்கம் 60 கிலோமீற்றர் வரையான வேகத்தில் காற்று வீசுவதற்குச் சந்தர்ப்பம் உள்ளதால், கடலில் பயணம் செய்வோரும் மீனவர்களும் அவதானமாக இருக்குமாறு இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

நாடுமுழுவதும் அடுத்த சில நாள்களில் தென்மேற்கு பருவப்பெயர்ச்சி நிலைமை ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுகின்றது. மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் தென்மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

சப்ரகமுவ மாகாணத்திலும் காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லிமீற்றர் அளவான பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என்றுள்ளது. (ம-இ)

## இரும்பு உற்பத்திகளுக்கு தரச்சான்றிதழ் கட்டாயம்



கொழும்பு, ஜூன் 5

இரும்பு உற்பத்திகளுக்குத் தரச்சான்றிதழ் கட்டாயமாக்கப்படவுள்ளது. எஸ்.எல்.எஸ். தரச்சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியாத இரும்பு உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எஸ்.எல்.எஸ். தரச்சான்றிதழ் பெறப்படாத நிறுவனங்கள் இரும்புக் கம்பிகளை உற்பத்தி செய்து வருவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அந்தத் தரப்பினரை அழைத்து கலந்துரையாடப்பட்டுள்ளது. எஸ்.எல்.எஸ். தரச்சான்றிதழை பெற்றுக்கொள்ளாத நிறுவனங்கள் தொடர்பில் தரச்சான்றிதழ் நிறுவனத்துக்கு அறிவித்து, அந்த நிறுவனங்களின் தொழிற்சாலை செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கட்டுமானத்துறையுடன் தொடர்புடைய பொருள்கள் தொடர்பில் உரிய தரத்தைப் பேணவேண்டிய தேவையுள்ளது. இதன் காரணமாக இரும்பு உற்பத்திகளுக்கு தரச்சான்றிதழை கட்டாயமாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (எ-இ)

## நான் எவருக்கும் அஞ்சேன்: வடிவேலு சுரேஷ் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 5

நான் எவருக்கும் அச்சமடைந்து தீர்மானங்களை எடுப்பவன் அல்லன். மாறாக சரியான தீர்மானங்களை எடுப்பவன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரான வடிவேல் சுரேஷ்.

அரசாங்கத்துக்கான ஆதரவு நிலைப்பாட்டை மேற்கொண்டமையால், வடிவேலு சுரேஷுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி அண்மையில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தது. இவர், ஜனாதிபதி ரணில் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தோட்டத் தொழிலாளர்கள் சங்கப் பிரதிநிதிகளின் கலந்துரையாடலிலும் கலந்து கொண்டார். இதன்போதே ரணில், வடிவேலு சுரேஷிடம் 'உங்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிந்தேன். நீங்கள் இங்கு வந்தால் உங்களுக்குப் பிரச்சினைகள் வராதா?' என்று வினவினார். இதற்கே, 'நான் எவருக்கும் அச்சமடைந்து தீர்மானங்களை எடுப்பவன் அல்லன். மாறாக சரியான தீர்மானங்களை எடுப்பவன்' என்று வடிவேலு சுரேஷ் பதில் வழங்கியுள்ளார். (ம-இ)

## சம்பந்தர் விழா

கொழும்பு, ஜூலை 5

சைவசமய குரவர்களில் இளையவரான திருஞானசம்பந்தர் குருபூசையை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத்துறை உயர்பட்டப் படிப்புக்கள் பீட சைவசித்தாந்த முதுமாணி கற்கை அணி VII இணைந்து நடத்தும் திருஞானசம்பந்தர் விழா இன்று திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறைத் தலைவர் பொன்னுத்துரை சந்திரசேகரம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடப் பீடாதிபதி பேராசிரியர் செ.கண்ணதாசன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-66)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தனிநாட்டுக் கோரிக்கை: ஆதரிக்காது இந்தியா!

## தமிழ்த் தலைவர்கள் உணரவேண்டுமென அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 5**

**தனிநாட்டுக் கோரிக்கைகளை இந்தியா ஒருபோதும் ஆதரிக்காது. இதை தமிழ்த்தலைவர்கள் உணரவேண்டும். புலம்பெயர் தேசங்களில் உள்ளவர்களின் வேறுபட்ட நிகழ்ச்சி நிரல்களுக்கு சிக்கிக் கொண்டு மீண்டும் ஆயுதப் போருக்கு வழிசமைக்கக்கூடாது - இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.**

கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்தியா ஒருபோதும் பிரிவினைக்கு அங்கீகாரம் வழங்காது என்ற யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளவேண்டும். முற்போக்கான சிந்தனைகளைக் கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துடன் இனப் பிரச்சினைகளுக்கான தீர்வு உட்பட அனைத்து விடயங்களுக்கும் பேச்சுக்கள் ஊடாக தீர்வைக் காண்பதற்கு தற்போது அரிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தைத் தமிழ்த் தலைவர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்பது எனது கோரிக்கை. புலம்பெயர் தேசங்களில் உள்ள தமிழ்த் தரப்பினர் மற்றும் அவர்கள் சார்ந்த சக்திகளுக்கு மாறுபட்ட நிகழ்ச்சி நிரல்கள் உள்ளன. அவர்கள் இலங்கையில் நிரந்தரமானதொரு தீர்வை எட்டுவதற்கு இதயசுத்தியுடன் விரும்பவில்லை என்பது பல செயற்பாடுகள் ஊடாக உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

அவர்கள் சார்ந்துள்ள நாடுகளில் அவர்களது வகிபாகத்தினை தக்க வைத்துக்கொள்வதற்கான பல செயற்பாடுகளை முன்னெடுக்கின்றார்கள். அவ்வாறான செயற்பாடுகளை எமது நாட்டிலும் தமிழ்த் தலைவர்களை மையப்படுத்தி முன்னெடுக்கின்றார்கள். இந்த நிகழ்ச்சி நிரலுக்குள் தமிழ்த் தலைவர்கள் சிக்கிக்கொள்வதால் தமிழ் இளையோரின் எதிர்காலமே பாதிக்கப்படப் போகிறது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டியுள்ளது. 1977ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் அப்போதைய தமிழ்த் தலைவர்கள் தனிநாட்டுக்கான கோரிக்கையை முன்னிலைப்படுத்தியே தேர்தலில் போட்டியிட்டார்கள். அவர்களால் அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற முடிந்திருக்கவில்லை. இதனால் அந்தத் தலைவர்களுக்கு எதிராக இளைஞர்கள் மாறியதுடன், அவர்கள் தலைவர்களால் செய்ய முடியாததை தாம் ஆயுத வழியில் நிகழ்த்திக் காண்பிப்போம் என்று புறப்பட்டார்கள்.

இந்தத் தீர்மானம் கடந்த 30 ஆண்டுகளாக நாட்டை சிதைத்துவிட்டது. பிரதானமாக தமிழ் மக்களையும், அவர்கள் வசிக்கும் பகுதிகளையும் மிகவும் மோசமாக பாதித்துவிட்டது.

இந்த விடயத்தில் தமிழ்த் தலைவர்கள் திறந்த மனதுடன் தீர்மானங்களை எடுக்கவேண்டும். இந்தியாவைப் பொறுத்தவரையில், தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஒருபோதும் அங்கீகாரமளிக்காது. இந்தியாவின் தென்பிராந்தியங்களில் அவ்விதமான சிந்தனைகள் கடந்த காலங்களில் தோன்றியிருப்பதால், மத்திய அரசாங்கம் இந்த விடயத்தில் மிகவும் தீவிரமாக இருக்கும் என்பதே யதார்த்தமானதாகும் - என்றார். (எ-இ)

# இவ்வாண்டு இறுதிக்குள் 450 மில். டொலர் கடன்

## உலக வங்கி இணக்கம்

வருட இறுதிக்குள் 450 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கைக்கு வழங்க உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பை அடுத்தே இந்த நிதி உதவியை வழங்கத் தீர்மானித்துள்ளது.

நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கும் உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நீண்ட நாள்களாக நிதி சந்தையின் ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்தல் மற்றும் நாட்டின் பொருளாதார நிலைகளை சாதகமான முறைமையின் கீழ் கையாளுதல் போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டு வந்தது. புள்ளி விவரங்களுடன் தயாரிக்கப்பட்ட இருதரப்புத் திட்ட வரைவு உலக வங்கி பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டது. ஆனால், பல்வேறு நிபந்தனைகளுடன் உலக வங்கியின் பிரதிநிதிகள் பேச்சுக்களைத் தொடர்ந்தனர்.

நீண்ட கலந்துரையாடல்களின் பின்னர் நிபந்தனைகள் சிலவற்றை இலகுவாக்கி 450 மில்லியன் டொலர் நிதி உதவிக்கு உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது. இந்த நிதி உதவி வருட இறுதிக்குள் கிடைக்கும் என ஜனாதிபதி அலுவலக பிரதானி சாகல ரத்நாயக்க தெரிவித்தார். (எ-இ)


## துணையாக இருக்கக்கூடியவர் தேவை

நல்லூருக்கு அண்மையாக வசிக்கும் வயதான அம்மையாருக்கு துணையாக இருக்கக்கூடியவர் தேவை. படித்தவர்கள் விரும்பத்தக்கது. எந்த வயதினரும் விண்ணப்பிக்க முடியும். தங்குமிட வசதி மற்றும் மூன்று வேளையும் உணவு வழங்கப் படும்.

**சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.**

**(40,000 ரூபாவுக்கு மேல்)**

**தங்கி நிற்கக் கூடியவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கவும்.**

**தொடர்பு :- 071 411 5000**


## சுதுமலைப் பகுதியில் நகைகள் திருட்டு

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுதுமலைப் பகுதியில், 12 பவுண் நகைகள் நேற்றுமுன்தினம் திருடப் பட்டுள்ளது என்று மானிப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. ஆலய உற்சவம் ஒன்றுக்காக வீட்டார் சென்ற நிலையிலேயே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ம-125)




**க**ண்ணுக்க எண்ணெய் ஊத்திக் கொண்டு காவல் காக்கிறதெண்டு கதையளில கேள்விப் பட்டிருக்கிறம். ஆனால் அதை நேரில பாக்க வேணுமெண்டால் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்குப் போனால் கண்ணாரப்பாக்கலாம். விசிட்டர்ஸ் ரைம் முடிஞ்சுதெண்டால் செக்கியூரிட்டிமார் வசிட்டர் மாதிரி மாறிடுவினம். யமன் கூட பெரியாஸ்பத்திரிக்குள்ள கால் வைக்கமுடியாது. அப்பிடியொரு காவல். அவசரமா பெரியாஸ்பத்திரிக்குள்ள போகவேண்டிய தேவையுள்ள சிலருக்கு இப்பிடி செக்கியூரிட்டிமார் கடுமையா நிக்கிறது சினமாத்தான் இருக்கும். ஆனாலும் சிலநேரங்களில இப்பிடி கடுமையா இருந்தால் தான் எல்லாத்தையும் சமாளிக்கவும் முடியும். எல்லாத்துக்கும் ரண்டு பக்கம் இருக்கும் தானே.

இப்பிடிப்பட்ட செக்கியூரிட்டிமாரையும் ஏய்ச்சுக் கொண்டு போற எமகாதகர்களும் இருக்கத்தான் செய்யினம். அப்பிடி ஒராள் கொஞ்சநாளைக்கு முதல் உள்ளுக்க போக வெளிக்கிட்டிருக்கிறார். ஆனால் விசிட்டர்ஸ் ரைம் முடிஞ்ச பிறகு இவர் வலுகலாதியாப் போறதை செக்கியூரிட்டி ஒராள் கண்டுபிடிச்சுட்டார். 'அண்ணை விசிட்டர்ஸ் ரைம் முடிஞ்சுது. இனி பின்னேரம் வாங்கோ' எண்டு சொல்லியிருக்கிறார். அப்பிடியிருந்தும் அந்தாள் உள்ளுக்க போக வெளிக்கிட, செக்கியூரிட்டி கொஞ்சம் கடுமையாக் கதைக்கத் தொடங்கிட்டார். உடனேயே உள்ளுக்க போக வெளிக்கிட்டவருக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்திட்டுது.

'நான் ஆரெண்டு தெரியுமோ? பொறு இப்ப, அண்ணைக்கு கோல் அடிச்சு உன்னை வேலையே இல்லாமல் பண்ணுறன்' எண்டு விலாசக்கதை கதைச்சுக் கொண்டு, கொஞ்சக்காலத்துக்கு முதல் யாழ்ப்பாணத்தை ஆட்டிப்படைக்க வெளிக்கிட்ட ஒரு அரசியல்வாதியின்ர ஏரியா இணைப்பாளர் எண்டு தன்னைச் சொல்லியிருக்கிறார். அவர் அந்த அரசியல்வாதியின்ர ஏரியா இணைப் பாளர் எண்டது உண்மைதான். ஆனால் அந்த அரசியல்வாதியே காத்துப்போன பலூன்மாதிரி, தானுண்டு தன்ர பாடுண்டு எண்டு திரியேக்க, அவரின்ர 'இணைப்பாளருக்கு' மட்டும் இன்னும் பழைய திமிர் செமிக்கேலைப் போல. ஆனால் உதெல்லாம் பெரியாஸ்பத்திரி செக்கியூரிட்டி மாரிட்ட எடுபடாதே.

'நீங்கள் ஆரின்ர ஆளா இருந்தாலும் பரவாயில்லை, என்னை வேலையை விட்டுத் தூக்கினாலும் பரவாயில்லை. ஆனால் நான் என்ர டியூட்டியை செய்வன். நீங்கள் இப்ப போட்டு பின்னேரம் வந்து உள்ளுக்க போங்கோ' எண்டு 'கட்டன் ரைட்டா' சொன்னதும், அந்த இணைப் பாளருக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேலை. ஆள் நைஸா வெளியில மாறிட்டார். இப்பிடிக் கன இடங்களில 'தலையள்' பேசாமல் கிடந்தாலும், வாலுகள் இன்னமும் ஆடிக்கொண்டு தான் இருக்கு.



- பட்சி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பகர்த்தா!

■ சி.அ.யோதிலிங்கம்

**ஜூன் மாதம் 5 ஆம் திகதியாகிய இன்று உரும்பிராய் சிவகுமாரனின் 49 ஆவது நினைவு தினமாகும். அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**



தனது 24 ஆவது வயதில் சிவகுமாரன் மரணமடைந்தான். அவன் உயிரோடு இருந்திருந்தால் தற்போது 73 வயதாகி இருக்கும். ஆயுதப்போராட்டத்தின் ஆரம்பகர்த்தா அவன்தான். சயனைட் அருந்தி முதன்முதலில் மரணமான போராளியும் அவன்தான். சிவகுமாரனை நினைவு கூருவதன் மூலம் தமிழ்த் தேசிய அரசியல் வரலாற்றையும் அதற்கு பங்களித்தவர்களையும் நாம் நினைவு கூருகின்றோம்.

சிவகுமாரன் முதலில் கவனம் செலுத்தியது சாதி எதிர்ப்புப் போராட்டத்தில்தான். தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுத்த அக்கால இளைஞர்களிடையே சாதி முரண்பாடு தொடர்பாக இரண்டு கருத்துக்கள் இருந்தன. ஒன்று இது அறநெறிகளுக்கு முரணானது. இரண்டாவது தமிழ்த் தேசிய அரசியலை சாதி முரண்பாடு பலவீனப்படுத்தும். இவை தவிர இந்த விவகாரத்தை கோட்பாட்டு ரீதியில் விளங்கிக் கொண்டார்கள் எனக் கூற முடியாது. இடதுசாரிகளின் குறிப்பாக சண்முகதாசன் தலைமையிலான சீனச்சார்பு கம்யூனிஸ்ட்கட்சியின் சாதி ஒழிப்புப் போராட்டங்களும் இவர்களைப் பாதித்திருந்தன. இந்தப் போராட்டங்கள் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களை வெகுவாகப் பாதித்தது. அடித்தள மக்கள் மத்தியில் அரசியல் பணியை மேற்கொள்ளச் சென்றால், அங்கெல்லாம் சாதி ஒடுக்குமுறைக்கு பதில் சொல்ல வேண்டியிருந்தது.

சிவகுமாரன் 1960 களின் பிற்பகுதியில் சாதி ஒழிப்புப் போராட்டத்தில் கவனம் செலுத்தினான். 1968 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2 ஆம் திகதி 18 வயதாக இருக்கும் போது உரும்பிராய் ஞானவைரவர் கோயிலடியில் சமபந்தி போசனத்தை நடத்தினான். 1970களில் தேசியப்போராட்டம் நோக்கி சிவகுமாரனின் கவனம் திரும்பியது. இதிலும் சிவகுமாரனின் நம்பிக்கை இரண்டுதான் ஒன்று தமிழீழமே தீர்வு. இரண்டாவது ஆயுதப்போராட்டமே அதற்கான வழிமுறை. சிவகுமாரனின் முதலாவது ஆயுத நடவடிக்கை 1970 ஆம் ஆண்டில் ஆரம்பமானது. பிரதி அமைச்சர் சோமவீர சந்திரசிறியின் வாகனத்துக்கு சிவகுமாரன் குண்டை எறிந்தான். இது தொடர்பாக படையினரால் கைது செய்யப்பட்டு ஐந்து மாதங்கள் வரை சிறையில் இருந்தான். இது தொடர்பான வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் இடம்பெற்றபோது நீதிமன்றமே மக்களால் நிரம்பியிருந்தது. சிவகுமாரன் குற்றவாளிகள் கூண்டில் ஏறியதும் வெளியில் இருந்த மக்களும் சிவகுமாரனை பார்ப்பதற்காக உள்ளே வரத்தொடங்கினர். அக்காலத்தில் சிவகுமாரன் தமிழ் மக்களின் ஹீரோ.

### கல்வித் தரப்படுத்தலை எதிர்த்துப் போராட்டம்

சிவகுமாரனின் இரண்டாவது செயற்பாடு தமிழ் மாணவர் பேரவையோடு இருந்தது. 1970 ஆம் ஆண்டு கூட்டுமுன்னணி அரசாங்கம் உயர் கல்வியில் தரப்படுத்தல் முறையை அறிமுகப்படுத்தியது. தமிழ் மாணவர்கள் இதனை எதிர்ப்பதற்காக தமிழ் மாணவர் பேரவை என்ற அமைப்பை உருவாக்கினர். சிவகுமாரன் தமிழ் மாணவர் பேரவையின் மத்திய குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டான். தமிழ் மாணவர் பேரவை தரப்படுத்தலை எதிர்த்து 1970ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 23 ஆம் திகதி பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தையும், கண்டன ஊர்வலத்தையும் நடத்தியது. சிவகுமாரனும், முத்துக்குமாரசுவாமியும் (இவர் தற்போது அமெரிக்காவில் உள்ள சர்வதேச மன்னிப்புச்சபையில் சட்டத்தரணியாக பணியாற்றுகின்றார். மாவட்ட நீதிபதியாக இருந்த தம்பித்துரையின் மகன். தமிழ் மாணவர் பேரவை மத்தியகுழு உறுப்பினர்களில் ஒருவர். நீண்டகாலம் சிறைவாசம் அனுபவித்தவர். சிவகுமாரனின் முதலாவது சிலையைத் திறந்து வைத்தவரும் இவரே!) ஒலிபெருக்கி பூட்டப்பட்ட காரில் குடாநாட்டில் உள்ள பாடசாலைகளுக்குச் சென்று ஊர்வலத்தில் கலந்துகொள்ளுமாறு மாணவர்களுக்கு அழைப்பு விடுத்தனர். இதன் போது கைது செய்யப்பட்டு எச்சரிக்கையுடன் விடுதலை செய்யப்பட்டனர். கொக்குவிலில் இருந்து ஊர்வலம் ஆரம்பமாகி யாழ்ப்பாணம் முற்றவெளியைச் சென்றடைந்தது. அங்கு கண்டனக் கூட்டம் இடம்பெற்றது. உணர்ச்சிகரமான ஊர்வலமாக இருந்தது. சுமார் பத்தாயிரம் வரை இளைஞர்கள் ஊர்வலத்தில் பங்குபற்றியிருந்தனர். பெருந்திரளாக இளைஞர்கள் பங்குபற்றிய முதலாவது கண்டன ஊர்வலம் இதுதான்.

சிவகுமாரனின் மூன்றாவது செயற்பாடு யாழ். நகர முதல்வர் அல்பிரட் துரையப்பா மீதான தாக்குதல் ஆகும். தமிழ் மாணவர் பேரவை தமிழர் தாயகத்தில் செயற்படும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியினரை எதிர்ப்பது எனத் தீர்மானித்தது. அல்பிரட் துரையப்பா சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளராக இருந்ததோடு யாழ். மாநகரசபையின் முதல்வராகவும் இருந்தார். 1971 ஆம் ஆண்டு பங்குனி மாதம் யாழ்ப்பாணம் 2 ஆம் குறுக்குத்தெருவில் வைத்து அல்பிரட் துரையப்பாவின் காருக்கு சிவகுமாரனால் கைக்குண்டு வீசப்பட்டது. அல்பிரட் துரையப்பா குண்டு வெடிப்பதற்கு முன்னரே காரிலிருந்து இறங்கியமையினால் தப்பியிருந்தார். கார் முழுமையாக வெடித்துச் சாம்பலானது. சிவகுமாரன் மீண்டும் கைது செய்யப்பட்டான். 22 மாதங்கள் அதாவது ஒன்றரை ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தான். அல்பிரட் துரையப்பா பின்னர் புலிகளினால் கொல்லப்பட்டார். இந்தக்கொலையில் பிரபாகரன் நேரடியாகவே பங்கேற்றிருந்தார்.

### தமிழாராய்ச்சி மாநாட்டில் முக்கியமான பொறுப்பு

சிவகுமாரனின் நான்காவது செயற்பாடு 1974ஆம் ஆண்டு தை மாதம் முதல் வாரத்தில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் முக்கியமான செயற்பாட்டாளராக மாநாட்டின் வெற்றிக்காக இரவு பகலாக பணியாற்றினான். மாநாட்டு அரங்க ஒழுங்கு சிவகுமாரனிடம் ஒப்படைக்கப்பட்டது. தமிழாராய்ச்சி மாநாட்டின் பத்தாம் நாள் மாநாட்டில் பங்குபற்றிய கலைஞர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு மக்கள் பெரும் திரளாக வருவார்கள் என எதிர்பார்க்கப்படவில்லை. வீரசிங்கம் மண்டபம் போதாமல் இருந்தது. சிவகுமாரனும் இளைஞர்களும் மண்டப வாசலில் தற்காலிக மேடை அமைத்து நிகழ்வை நடத்தினர். அப்போது தான் பொலிஸ் அதிகாரி சந்திரசேகரா தலைமையில் வந்த பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர். மின்சார வயர் அறுந்து விழுந்தது. 14 வயதுச் சிறுவன் உட்பட 7 பேர் கருகி மாய்ந்தனர். சிவகுமாரன் இந்தச் சம்பவங்களை நேரடியாகவே பார்த்தான். அன்றே பழிக்குப்பழி வாங்குவது எனத் தீர்மானித்தான். அனைத்து மக்களும் வெளியேறும் வரை மண்டப வாசலிலே பித்துப்பிடித்தவன் போல நின்றான். இரண்டு தீர்மானங்களை எடுத்தான் ஒன்று பழிக்குப்பழி வாங்குவது. இரண்டாவது படையினரிடம் உயிருடன் பிடிபடுவதில்லை.

அன்று இரவே வீட்டுக்குச் செல்வதற்கு முன் நல்லூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருளம்பலத்தின் வீட்டுக்குக் காவலுக்கு நின்ற பொலிஸார் மீது தன்னந்தனியாக கைக்குண்டை வீசினான். சிவகுமாரனைத் தேடும் படலம் ஆரம்பமாகியது. தொடர்ந்து நல்லூர் கைலாசபிள்ளையார் கோயிலடியில் வைத்து பொலிஸ் அதிகாரி சந்திரசேகரா மீது குண்டு வீசினான். தன்னிடமிருந்த கட்டுத்துவக்கினாலும் அவரை நோக்கி துப்பாக்கிச்சூட்டை நடத்தினான். ஆனால், வெற்றி கிடைக்கவில்லை.

இதன் பின்னர் கடும் தேடலுக்கு உட்பட்டான். உரும்பிராய் கிராமம் பலதடவைகள் சுற்றிவளைப்புக்கு உள்ளாக்கப்பட்டது. சிவகுமாரனின் தலைக்கு படையினரால் விலையும் பேசப்பட்டது. இந்நிலையில் தான் சிவகுமாரனின் நண்பர்கள் சிவகுமாரனை இந்தியாவுக்கு அனுப்ப முடிவு செய்தனர். பலரிடம் நிதி உதவி கேட்கப்பட்டது. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் 5 ஆயிரம் ரூபா உதவி கேட்கப்பட்டது. அவரும் கையை விரித்தார். இறுதியில் கோப்பாய் கிராம வங்கியில் திருடுவது என சிவகுமாரனும் நண்பர்களும் தீர்மானித்தனர். அது தோல்வியில் முடிந்தது. சிவகுமாரன், பிரான்சிஸ் (கவிஞரும் எழுத்தாளருமான கி.வி.அரவிந்தனே இவர்) ஜீவராசா, மகேந்திரன் ஆகிய நால்வரே இம்முயற்சியில் ஈடுபட்டனர். தோட்ட வெளிக்குள்ளால் தப்பி ஓடியபோதே சிவகுமாரன் கைது செய்யப்பட்டான். கைது செய்யப்பட்டவுடன் தன் கைவசம் வைத்திருந்த சயனைட் திரவத்தை அருந்தினான். யாழ். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின் மரணமானான். கூடவே மகேந்திரனும், ஜீவராசாவும் கைது செய்யப்பட்டனர். பிரான்சிஸ் தப்பி ஓடி தலைமறைவாகினார். சிவகுமாரனின் மரணத்துக்குப் பின்னர் போராட்டம் வானளவு உயர்ந்தது. உலகமே வியக்கும் வண்ணம் முப்படைகளையும் அமைத்தது. இந்த வளர்ச்சிக்கு அச்சாணி சிவகுமாரன் தான்! அவனது நினைவுகூரலில் இந்த விடயம் தான் முக்கியமானது. ■

## இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** காரியங்கள் இழுபறியாகும். தந்தை வழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். வாழ்க்கைத் துணையால் சில சங்கடங்களைச் சந்திக்கநேரிடும். உடல்அசதி உண்டாகும்.

**இடபம்:** காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும். நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**மிதுனம்:** திடீர் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**கடகம்:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஆட்கொள்ளும். வாழ்க்கைத் துணையால் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். கடன்கள் விடயத்தில் கவனம் தேவை.

**சிம்மம்:** தாய்வழி உறவில் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஒத்துழைப்பு கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு திடீர் பணவரவுக்கும், திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகளால் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். உற்சாகம் தரும் நாள்.

**விருச்சிகம்:** மகிழ்ச்சியான நாள். ஆனால், தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தவும். புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். பிள்ளைகள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. நண்பர்கள் பண உதவி கேட்டு வருவார்கள்.

**மகரம்:** முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு உகந்தநாள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிரிகளால்ஏற்பட்ட இடையூறுகள்விலகும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள். வியாபாரத்தில் பிரச்சினைகள் எதுவும் இல்லை.

**மீனம்:** இன்று பேசும் வார்த்தைகளில் நிதானம் தேவைப்படும் நாள். எதிர்பாராத செலவுகளால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நாளொரு நல்வார்த்தை

"ஆயிரக்கணக்கான கேள்விகள் இருக்கலாம். ஆனால் அதற்கு ஒரே ஒரு பதில்தான் உனது விழிப்புணர்வு"

– ஓஷோ

## கள்ளமௌனத்தில் ஏது நியாயம்?


தமிழர் தாயகமான வடக்கு – கிழக்கில் அத்துமீறிய வகையில் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் பௌத்த மயமாக்கலை இந்தியா தடுத்து நிறுத்தப் போவதில்லை. மாறாக, தமது நாட்டில் தோன்றிய பௌத்தம் ஏனைய பகுதிகளிலும் பரவுவதை இந்தியா விரும்பவே செய்யும் என்றவாறாகக் கருத்துத் தெரிவித்திருக்கின்றார் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் 'முற்போக்கு'க் கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன். தமிழ்த் தலைவர்களில் இந்தியாவுடன் மிகவும் நெருக்கமாகச்செயற்படுகின்றவர்களில் மனோ கணேசன் முக்கியமானவர் என்பதால் அந்த நாட்டைப் பற்றிய புரிதலும் தெளிதலும் மனோவுக்குக் கொஞ்சம் அதிகமாகவே உள்ளது. ஆதலால், இந்தியாவின் நிலைப்பாட்டை அவர் துணிந்து பட்டவர்த்தனமாக்கியிருக்கலாம், அதில் தப்பேதும் இல்லை.

ஆனால், இந்தியாவின் இந்தக் கள்ளமௌனம் சரியானதா? பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்புக்கு எதிராக இந்தியா குரல்கொடுக்காமல் இருப்பது நியாயமானதா? என்ற கேள்விகளை மனோ கணேசன் தனக்குத் தானே கேட்டுக்கொள்ளவேண்டும். அத்துடன், இந்தியாவின் கள்ளமௌனத்தைக் கண்டிக்காமல், அதற்கு நியாயம் கற்பிக்க முனைவது தார்மீக அடிப்படையில் சரியானதுதானா? என்ற புரிதலையும் மனோ கணேசன் தனக்குள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில், போரின்போதும் அதன் பின்னரும் தமக்கு நேர்ந்த இன்னல்களுக்கான நியாயத்தைத் தரும் தீர்ப்பிடமாக இந்தியாவைத் தமிழர்கள் நம்பினார்கள் – இன்னமும் நம்பிக்கொண்டிருக்கின்றனர். ஆசிய வட்டகையில் இந்தியாவைவிட அனைத்து வகையிலும் சீனா பலமும் எழுச்சியும் பெற்றுள்ளபோதிலும், 'பிராந்திய வல்லரசு' என்ற எண்ணப்பாட்டிலிருந்து இந்தியாவை இன்னமும் தமிழர்கள் தகுதி நீக்கம் செய்யவில்லை.

நிற்க:

எல்லாவற்றுக்கும் மேலாக தமிழர்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வாக, 13 ஆவது திருத்தத்தை முன்வைத்த நாடும் இந்தியாவே. இந்த 13 ஆவது திருத்தத்தின் முக்கியமான அம்சம் 'காணி பொலிஸ் அதிகாரங்கள் மாகாணங்களுக்குப் பகிரப்படவேண்டும்' என்பதாகவே அமைகின்றது. 13 ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டு, காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாணங்களுக்குப் பகிரப்பட்டிருந்தால் இன்று வடக்கிலும் கிழக்கிலும் இவ்வாறான கொடூரமானதும் அபத்தமானதுமான பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்புக்கள் இடம்பெற வாய்ப்பில்லை. இந்த 13 ஆவ்து திருத்தம் பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்பு மனோநிலைகளுக்கு எதிரான நகர்வுகளுக்கான பிடிமானங்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வழங்கியிருக்கும். ஆக, இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இந்தியா முன்வைத்த 'தீர்வுப்பொதி' கடந்த 30 ஆண்டுகளுக்கும்மேலாகக்கிடப்பில்போடப்பட்டு, அந்தத் தீர்வுப் பொதியிலுள்ள விடயங்களுக்கு முற்றிலும் முரணான வகையில் முன்னெடுக்கப்படும் அத்துமீறல்களுக்கும் ஆக்கிரமிப்புகளுக்கும் பதில் சொல்ல வேண்டிய கடப்பாடும் – தேவைப்பாடும் இந்தியாவுக்கு இருக்க வாய்ப்பில்லை என்று மனோ கணேசன் தெரிவிக்கும் கருத்தின் சிந்தனை மட்டம்தான் என்ன?

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இந்தியா முன்வைத்த 13ஆவது திருத்தத்திலுள்ள சட்ட ஏற்பாடுகளுக்கு முரணாகவும் புறம்பாகவும் மேற்கொள்ளப்படும் அத்துமீறல்களும் – சுரண்டல்களும் – ஆக்கிரமிப்புகளும் – அடக்குமுறைகளும் 'இந்திய நலனை மையப்படுத்தியது' என்ற ஒரே காரணத்துக்காக அவற்றையெல்லாம் இந்தியா சகித்துக் கொள்கின்றது என்றால், இதைவிட வா சிங்கள – பௌத்த பேரினவாதம் தமிழர்களை இம்சித்துவிடப் போகின்றது.



20 வயதுக்கு மேற்பட்ட

# 35 சதவீதமானோருக்கு உயர்குருதி அழுத்தம்!

**கொழும்பு, ஜூன் 5**

**இலங்கையில் 20 வயதுக்கு மேற்பட்டவர்களில் 35 வீதமானோருக்கு, உயர் குருதி அழுத்தம் உள்ளமை அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது என்று சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.**

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவுகளில் இந்தத் தகவல் பெறப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்றா நோய் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் சம்பிகா விக்ரமசூரிய தெரிவித்தார்.

உணவில் சேர்க்கும் உப்பின் அளவு அதிகரித்துள்ளமையே இதற்குப் பிரதான காரணமாகும் என்பது கண்டறியப்பட்டுள்ளது. ஒருவர் நாளொன்றுக்கு, ஒரு மேசைக் கரண்டி அளவான உப்பையே உணவில் சேர்க்கவேண்டும் என்பதே பரிந்துரைக்கப்பட்ட அளவாகும். எனினும், இந்தமுறை மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், ஆண்கள் நாளொன்றுக்கு 15.1 கிராம் உப்பையும், பெண்கள், 13.5 கிராம் உப்பையும் உட்கொள்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இதன்படி, உப்பை உட்கொள்வது 3 மடங்கு அதிகரித்துள்ளது என்றும், பொதுமக்கள் உணவில் சேர்க்கும் உப்பின் அளவைக் குறைப்பதன் மூலம், உயர் குருதி அழுத்தத்தைக் குறைக்கமுடியும் எனவும் சுகாதார அமைச்சின் தொற்றாநோய் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் சம்பிகா விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

இதேநேரம், உளவியல் தாக்கம், சிறுநீரக நோய்த் தாக்கம் உள்ளிட்ட காரணங்களும் உயர் குருதி அழுத்தத்துக்குக் காரணம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# மேல் நீதிமன்ற நியமனங்களில் நீதிச் சேவை சங்கம் அதிருப்தி

மேல் நீதிமன்றத்துக்கு வழங்கப்படவுள்ள உடனடி நியமனங்களுக்கு முன்மொழியப்பட்ட சில பெயர்கள் தொடர்பாக இலங்கை நீதிச் சேவை சங்கம் தமது கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது. தற்போது நாடாளுமன்றத்தின் பிரதிச் செயலாளர் நாயகமாக கடமையாற்றும் டிக்கிரி ஜயதிலக்க மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த மற்றுமொரு அதிகாரியின் பெயர் என்பன அந்த நான்கு பெயர்களில் உள்ளடங்கியுள்ளன என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிய முறைப்பாட்டுக் கடிதத்தில் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

டிக்கிரி ஜயதிலக்க 2016 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தின் உதவிச் செயலாளராக பதவி ஏற்கும்வரை, நீதிவானாக பதவி வகித்திருந்தார். சட்டபூர்வமற்ற நிறுவனத்துக்கு அவர் நியமிக்கப்பட்ட நிலையில், எதிர்காலத்தில் எந்தநிலையிலும் நீதித்துறையின் உறுப்பினராக மீண்டும் சேர்த்துக்கொள்ள தகுதியற்றவர் என்றே கருதுகின்றோம் - என்று நீதிச் சேவை சங்கம் குறிப்பிட்டுள்ளது. (எ-இ)

நாளை

06.06.2023

செவ்வாய்க்கிழமை

வைகாசி 23

சுபநேரம் : 10.22 – 11.52

ராகுகாலம் : 02.52 – 04.22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதக்குழுவினர் தாக்குதல் 54 சிப்பாய்கள் உயிரிழப்பு!

## சோமாலியாவில் துயரம்

மொங்காடிசு, ஜூன் 5

சோமாலியாவில், அல் ஷபாப் ஆயுதக்குழு நடத்திய தாக்குதலில் உகண்டாவைச் சேர்ந்த 54 சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

சோமாலியாவில் அல் ஷபாப் என்ற பயங்கரவாத அமைப்பு செயற்பட்டு வருகின்றது. அந்த அமைப்பை ஒடுக்குவதற்காக ஆபிரிக்காவின் பல நாடுகளைச் சேர்ந்த இராணுவத்தினரும் சோமாலியாவில் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையிலேயே உகண்டா இராணுவத்தினர் இருந்த முகாமை இலக்குவைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் 54 சிப்பாய்கள் கொல்லப்பட்டுள்ளனர். இது சோமாலியாவிலும் உகண்டாவிலும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு அஞ்சி தமது இராணுவத்தை திரும்பப் பெறப்போவதில்லை என்று உகண்டா அறிவித்துள்ளது. உகண்டா சிப்பாய்களின் சாவுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று சோமாலிய இராணுவம் அறிவித்துள்ளது. (ம)



# இந்தியாவில் ரயில் விபத்து: உயிரிழப்பு 295ஆக உயர்வு



புதுடில்லி, ஜூன் 5

இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ரயில் விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 295ஆக அதிகரித்துள்ளது.

மூன்று ரயில்கள் ஒன்றுடன் இன்னொன்று நேருக்குநேர் மோதியதில் இந்த விபத்து சம்பவித்தது. விபத்தில் 234 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்றும் முதற்கட்டத் தகவல்கள் வெளியாகிய நிலையில், உயிரிழந்தோர் எண்ணிக்கை தற்போது 295ஆக அதிகரித்தள்ளது.

மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. நாளைமறுதினம் ரயில்கள் பயணிக்கக்கூடிய வகையில் மீட்புப் பணிகள் முழுமையடையும் என்று இந்திய ரயில்வே அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம)

**ஜூன் மாதம் 5ஆம் திகதியாகிய இன்று சர்வதேச சுற்றாடல் தினமாகும். அதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

# பூமியின் பாதுகாப்பே மனிதரின் பாதுகாப்பு

திரு.க.சுவாமிநாதன்
ஆசிரியர்
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

சுற்றாடலை நாம் பாதுகாத்தால் சுற்றாடல் நம்மைப் பாதுகாக்கும் என்ற கருத்திற்கிணங்க நம் முன்னோர்கள் இயற்கையை தெய்வமாக போற்றி வணங்கினர். இயற்கையோடு இசைவுற வாழ்ந்து வந்தனர். ஆனால், தற்போது இயற்கையை தம் இஷ்டத்துக்கு மாற்றியமைக்க விரும்பியதனாலும் நவீன விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றம் காரணமாகவும் கைத்தொழில் புரட்சியின் பின்னரான கால வளர்ச்சியில் பல நன்மையை பெற்றுக்கொண்டபோதும் அதன் விளைவால் இயற்கைசார் பெரும் அழிவுகளை மனிதன் மாத்திரமன்றி அனைத்து உயிரினமும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. அந்தவகையில் இன்று அனைவராலும் உச்சரிக்கப்படுகின்ற விடயங்களாக புவி வெப்பமாதல், பனிப்பாறை உருகுதல், கடல்மட்டம் உயர்தல், பச்சைவீட்டு விளைவு, காட்டுத்தீ, ஓசோன்படைத் துவாரம் அதிகரித்தல், பருவகால மாற்றங்கள், அமில மழை பெய்தல், பாலைவனம் உருவாதல், உயிரங்கிகள் அழிவுறுதல் போன்றன ஏற்படுவதற்கு மனித செயற்பாடுகளும் ஓர் முக்கியமான காரணமாக அமைகிறது. இவை அபிவிருத்தியடைந்த நாடுகள், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் என வேறுபாடின்றி அனைத்துத் தரப்பினருக்கும் கடும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. சுற்றாடல் சார் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 'பிளாஸ்ரிக் மூலமாக ஏற்படக்கூடிய மாசைத் தடுப்போம்' என்ற தொனிப்பொருளில் இந்த வருட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஞாயிற்றுத் தொகுதியில் ஆச்சரியமிக்க கோளாக புவி காணப்படுகின்றது. இங்கு எண்ணிலடங்காத தாவர வகைகள், உயிரினங்கள் காணப்பட்டபோதும் இவற்றில் கடைசியில் தோன்றியதாகக் குறிப்பிடப்படும் மனித இனம் இயற்கைச் சூழலை தான் விரும்பியது போல் வாழ்வதற்கேற்ப மாற்றியமைக்கத் தொடங்கியது. இதன்விளைவாக சூழல் மாசடைதல் ஏற்பட்டது. நிலம், நீர், வளி, ஒலி என அனைத்துமே மனித செயற்பாட்டால் மாசடைந்துவிடுகின்றது. இதன் காரணமாக நாம் பல்வேறு பாதகமான விளைவுகளை எதிர்நோக்கவேண்டி ஏற்படுகின்றது. அவ்வாறே மண்ணும் பல்வேறு சந்தர்ப்பங்களில் மாசடைகின்றது.

ஒலியும், மனித செயற்பாடு காரணமாக பல்வேறு வழிகளில் மாசடைகின்றது. இவற்றை நாம் அறிந்து கொள்வது மாத்திரமன்றி சூழல் மாசடைவதை இயலுமானளவு குறைக்க அல்லது தடுக்க நாம் என்ன செய்யலாம் என எல்லோரும் இன்றைய நாளில் சிந்தித்துத் செயற்படத் தொடங்க வேண்டியது அவசியமாகும்.

### பிளாஸ்ரிக் பேரரக்கன்

இன்று மக்களிடையே எந்தவேறுபாடுமின்றி அடுப்படி முதல் அண்டவெளி வரைக்கும் பிளாஸ்ரிக் மக்களுடைய வாழ்வில் பிரிக்கமுடியாத ஒன்றாகிவிட்டது. உணவை நீண்டகாலம் பேணல், உயிர்காக்கும் மருத்துவ செயற்பாட்டுப் பொருள்கள், வியாபார நடவடிக்கைகள், பயணப்பொதிகள், உணவுப்பரிமாறல், நிகழ்வுகள், இலகு பயணங்கள் என அனைத்திலும் மலிவு, இலகு, பாதுகாப்பு என்ற காரணத்தால் பிளாஸ்ரிக் மக்கள் வாழ்வில் ஆழ ஊடுருவிவிட்டது. ஆனால், அவ்வாறான பலநன்மைகள் காணப்பட்டபோதிலும் எமக்கு மாத்திரமன்றி எமக்குப் பின்னரான பல சந்ததியினருக்கு நாம் பயன்படுத்தும் பிளாஸ்ரிக்கே பெரும் அச்சுறுத்தலாக அமையப்போகிறது. தனித்து மனித உயிருக்கு மாத்திர மன்றி அனைத்து விலங்குகள், தாவரங்கள் மற்றும் உயிர் செயற்பாடுகளுக்கும் இயற்கை ஒழுங்குக்கும்கூட பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் ஆபத்து பிளாஸ்ரிக்கில் உண்டு. ஒவ்வொரு ஆண்டும் 400 மில்லியன் தொன்களுக்கு அதிகமான பிளாஸ்ரிக் உற்பத்தி செய்யப்படுகின்றது. அதில் அரைவாசி ஒருமுறை மட்டும் பயன்படுத்த வழங்கப்படுகின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பத்து சதவீதத்துக்குக் குறைவானவையே மீள்சுழற்சி செய்யப்படுவதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறான பிளாஸ்ரிக்குகளில் அதிகமானது குளங்கள், ஆறுகள், கடல்கள், வடிகால்கள் போன்றவற்றில் தேங்கிக்கிடக்கின்றன.

சூழல் மாசடைவதன் காரணமாக நாம் அறிந்தோ அறியாமலோ பல்வேறு விதமான விளைவுகளை எதிர்நோக்கு கின்றோம். எமது அப்பா, அப்பப்பா கண்டதாகக் கூறும் எத்தனையோ பறவை இனங்கள், விலங்கினங்களைக் காண்பது இன்று அரிதாக மாறிவிட்டது. அதேபோல் பல்வேறு தாவரங்களும் அழிந்துவரும் தாவரங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றுக்குப் பிரதான காரணமாக அமைவது சூழல் மாசடைதலும் அதன் விளைவுகளுமாகும். அந்தவகையில் சூழல் மாசடைவதால் மனிதனுக்கு ஏற்படக்கூடிய நோய்களாக பக்கவாதம், இருதயநோய்கள், நுரையீரல்ப் புற்றுநோய், ஒவ்வாமை, நிமோனியா, தோல் நோய்கள், உடல்பருமன், தாய்மை நிலை அடைவது தொடர்பான பிரச்சினைகள், கொலரா, செங்கண்மாரி, மனவழுத்தம், குருதியமுக்க நோய், ஒட்டுண்ணிப்புழு நோய்கள், டெங்கு, மலேரியா, யானைக்கால், சிக்கன்குனியா போன்றவற்றைக் குறிப்பிடமுடியும். நாம் அனைவரும் இன்றைய நாள் மாத்திரமே சர்வதேச சுற்றாடல் தினமென கடைப்பிடித்தால் போதாது. நாம் வாழும் அழகிய பூமியில் ஆரோக்கியமாக நாம் எல்லோரும் வாழ்வதற்கு தனிமனிதன் முதல் நாட்டின் அரசாங்கம் வரை அனைத்துத் தரப்பினரும் கைகோர்ப்பதன் மூலமே சூழல் மாசடைதலைத் தவிர்க்க முடியும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
10 . 03 . 1942



இறப்பு
05 . 06 . 1998

## அமரர் சின்னத்தம்பி நமசிவாயம் JP

(காரைநகர்)

(உரிமையாளர் - சிவகுமார் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்,
உப தலைவர் - தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ் மாவட்டம்,
செயலாளர் - யாழ் வணிகர் கழகம்)

தந்தையாய் தாயாய் யாவையும் ஆகி நின்ற எங்கள் தெய்வமே!
எந்தையே! எமைப் பிரிந்து ஈர்பத்து ஐந்தாண்டு போனதோ?
விந்தை உறவாய் கிடைத்தவரே! உண்டு நீ எம்முடனே என்பதாய்
சிந்தை நினைவுகளோ சூழ்ந்து வர உன் வழியில் நம் பயணம்.....

முகவரியை நீர் அளித்தீர் முகவரியாய் நீர் அமைந்தீர்
பகலிரவாய் நாமுயர நீர் உழைத்தீர் வணிகனாய்
அரசியல் வாதியாய் சமூக சேவகனாய் உங்கள் பாதை
சிர சிருத்தி நாம் தொடர்வோம் உங்கள் கனவுகளை நனவாக்க

கால நதி ஓடும் நில்லாது உங்கள் நினைவுகளோ வண்ணக்
கோலமாய் எம்முன்னே அழகு செய்யும் அது என்றும் மாறாது ஈழ
சிதம்பரத்து நடராசன் கழலடைந்து வாழுகின்ற உங்கள்
பாதம் பணிந்து வாழ்வோம் உங்கள் பாதையிலே நாம் தொடர்வோம்.

பிரிவுத் துயரில்....
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

20/5, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
077 661 8122, 077 631 9895

(CS/50661)AH-1

# மரண அறிவித்தல்

பிறப்பு
07 . 07 . 1946



இறப்பு
03 . 06 . 2023

## பேதுருப்பிள்ளை சிறில் (துரை)

(துரை ஸ்ரோர்ஸ்- மயிலிட்டி)

மயிலிட்டியை பிறப்பிடமாகவும் நோர்வேயை வதிவிடமாகவும் கொண்ட பேதுருப்பிள்ளை சிறில் நேற்று முன்தினம் (03.06.2023) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பேதுப்பிள்ளை லூர்தம்மா ஆகியோரின் மகனும், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் அழகம்மா ஆகியோரின் மருமகனும், மரியா (பேபி- நோர்வே) அவர்களின் பாசமிகு கணவனும், பகீரதன் (றேயிசன்- நோர்வே), றேயித்தா (லண்டன்), றீனா (நோர்வே), யசோ (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேவதிரவியம் (குணம் கிறீம் கவுஸ்- இலங்கை), பெனடிற்அம்மா (செல்வராணி- கனடா), பற்றிமாராணி (செல்வரத்தினம்- கனடா), காலஞ்சென்ற மாசில்லாராணி (செல்லமலர்) மற்றும் திருஞானசெல்வம் (செல்லம்- கொலண்ட்), பற்றிக் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தவராசா மற்றும் தவராணி (இலங்கை), தேவராசா (ஜேர்மனி), காலஞ்சென்ற தேவி மற்றும் யோகராசா (ராசா- நோர்வே) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.06.2023) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை யாழ்ப்பாணம் WhiteHouse மலர்ச்சாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக நோர்வே எடுத்துச் செல்லப்படும். நோர்வேயில் அடக்கம் செய்யப்படும் நேரம் பின்னர் அறிவிக்கப்படும்.

யசோ- 004795123722
ஜெரோம்-0773969096,0771869015

தகவல் :
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம்

அல்லாரையைப் பிறப்பிடமாகவும், கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம் நேற்று (04.06.2023) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தனது 97 ஆவது அகவையில் கொடிகாமம் ஆத்தியடி விநாயகர் திருவடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிர்காமர் முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கதிர்காமர் சுப்பிரமணியம் (நெல்களஞ்சிய பொறுப்பாளர் - வவுனியா) அவர்களின் அன்புமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிதம்பரம் (பொன்னாச்சி), சேதுப்பிள்ளை (அம்மா), சங்கரப்பிள்ளை (சிவகுரு), நடராசா, பார்வதிப்பிள்ளை, செல்லம்மா, தருமலிங்கம், தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, இராசம்மா மற்றும் இராசையா, நல்லம்மா, மகேஸ்வரிப்பிள்ளை, யோகராசா (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், பத்மராணி, காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் பத்மகாந்தன் (லண்டன்), பத்மறஞ்சினி, பத்மலோஜினி, பத்மகுமாரன் ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை (கமநல உத்தியோகத்தர் -AI) மற்றும் செல்வராசா (முருகன் மில் உரிமையாளர் - சங்கத்தானை), கே.வி. இரவீந்திரன் (கே.வைத்தியலிங்கம் ரேடர்ஸ் - திருநெல்வேலி), யோகேஸ்வரி (லண்டன்), சாந்தகுமாரி ஆகியோரின் அன்பு மிகு மாமியாரும், யசோதினி - சத்தியலிங்கம் (கனடா), கங்காதரன் - றம்மியா (லண்டன்), பிரபாதரன் - சர்மிளா (லண்டன்), கீர்த்திதரன் - அர்ச்சனா (அவுஸ்திரேலியா), ஜெகன் - தக்ஷா (கனடா), மாலினி - இளந்திரையன் (டுபாய்), ஜனகன் - அர்ச்சனா (அவுஸ்திரேலியா), சிந்துஜா (லண்டன்), நிலானி (லண்டன்), சில்வியா (லண்டன்), ஜாதவன், ஜதுர்ஷன், வர்த்தனா, யதீபா - சிரோசன் (இத்தாலி), சஜீவன், சயிந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமுள்ள பேர்த்தியாரும், சுவேதா, அஸ்வின், பரணிசா, பிரேயன், ஆரபி, ஜெய்டன், ஈதன், எய்டன், அக்ஷயா, அனன்யா, ஆதிரன், ஆரணன், ஜரா, சிறித்திக் ஆகியோரின் ஆருயிர் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2023) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 199 2464
077 306 0089

தாமோதரம்பிள்ளை வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

(cs.50682 (N-1)



தோற்றம் 26.01.1926
மறைவு 04.06.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள்

யாழ்ப்பாணம் ஜூன் 5

வடமராட்சி செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தால் கடந்த மாதம் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டன.

இதன்படி வவுனியா வடக்கு அனந்தர்குளம், சின்னப்பூவர சங்குளம் பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம், ஸ்ரீ நாக கண்ணகையம்மன் ஆலயங்களின் கட்டடப் பணிக்காக ஒரு இலட்சம் ரூபாவும் முல்லைத்தீவு மாவட்டம் கேப்பாபிலவு, பிலக்குடியிருப்பு பிரதேசத்தில் வசிக்கின்ற பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றுக்கு கழிப்பறை திருத்த வேலைக்காக 50 ஆயிரம் ரூபாவும் மின்சார இணைப்புக்காக 30 ஆயிரம் ரூபாவும் கிளிநொச்சி - உமையாள்புரம் உமாமகேஸ்வரர் தேவஸ்தானத்துக்கு கட்டடத் திருப்பணிக்காக 2ஆம் கட்டமாக 50 ஆயிரம் ரூபாவும் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

இந்தச் செயற்றிட்ட உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் நேரடியாகச் சென்று வழங்கி வைத்துள்ளார். (ய-27-66)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 05.02.1970

இறப்பு 06.05.2023

**சைமன் றஞ்சித் பெரேரா (றஞ்சித்)**

(குளிரூட்டி திருத்துநர் மற்றும் கிரிஷான் கபே உரிமையாளர்)

"என்னைச் சிநேகிக்கிறவர்களை
நான் சிநேகிக்கிறேன்"
(நீதிமொழிகள் 8:17)

நீங்கா நினைவுகளுடன்...

இல.88, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(CS 25143) A-1




சர்வதேச புகைத்தல் மற்றும் போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு தென்மராட்சி பிரதேச சமுர்த்தி அலகினால் கொடிவார நிகழ்வு கடந்த புதன்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. 'புகைத்தலிலிருந்து மீண்டதோர் நாடு; மகிழ்ச்சி நிறைந்த புதியதோர் கிராமம்' எனும் தொனிப்பொருளில் கொடிவாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ச-9)

## ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 5

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடைபெறும் ஆய்வரங்கில் கலந்துகொள்ள விரும்புபவர்களிடமிருந்து ஆய்வு முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளன.

'ஆசிரிய கல்வி' எனும் கருப்பொருளில் ஆய்வுக் கட்டுரை முன்மொழிவுகளை ஏ4 தாளின் ஒரு பக்கத்தில் அமையுமாறு யுனிகோட்டில் தட்டச்சு செய்து எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக klcresearch2023@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும், மேலதிக விபரம் தேவைப்படுவோர் 0770761177 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும் என கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் ச.லலீசன் அறிவித்துள்ளார். (ய-66)


## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14.10.1939

மறைவு 20.05.2019

அமரர்
**அம்பலவாணர் சின்னத்தம்பி முருகேசு**

திதி :- அபரபக்க துதியை

ஆண்டுகள் நான்கு போனது அப்பா
ஆனாலும் உம் நினைவு அழியாது என்றும்
மீண்டும் ஒருமுறை வந்து பிறந்திடாய்.
வேண்டும் எமக்கு உன்பாசம் அப்பா
பேணி எமை எடுத்து பெற்று வளர்த்தவரே
மூண்ட நெருப்பாக எமதுள்ளம் கனன்று எரியுதப்பா
வேண்டாத கோயில் இல்லை இரங்காத தெய்வமில்லை
மீண்டும் உந்தன் மடிமீது நாம் தவள வேண்டுமப்பா
ஆண்டவன் கட்டளைக்கு யார்தான் மீறுவார்கள்
அதனால் எம்மனதை ஆற்றி வருகின்றோம்
தெய்வமாய் உம்மை போற்றி வணங்கிடுவோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தங்கள் பிரிவால் துயருறும்

சாரதா வீதி, சங்கத்தானை.

குடும்பத்தினர்.

(CS 25145) A-1

## வேலையாட்கள் தேவை

பிரபல நிறுவனத்திற்கு சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை செய்வதற்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.

1. மின் இணைப்பாளர்
2. குழாய் பொருத்துனர்
3. A/C Repairing man

077 221 5167

## பணியாளர்கள் தேவை

கொழும்பு கொம்பனித் தெரு அருள்மிகு சிவசுப்ரமணிய சுவாமி கோவிலுக்கு

1)முகாமையாளர்
2)காசாளர்

தேவைப்படுகின்றனர். சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும் தங்குமிட வசதி கொடுக்கப்படும்.



தொடர்புகளுக்கு : 075 525 5127 ஆலய நிர்வாக சபை
மின்னஞ்சல் முகவரி: dpkratnam@gmail.com

(CR 39959)(K-1)

## வீடு வாடகைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் US Hotel இற்கு அருகாமையில் 5 படுக்கை அறைகள், வரவேற்பறை 3,குளியலறை 3 மற்றும் சமையலறை, உதவியாளர்கள் தங்கும் அறையை கொண்ட விசாலமான வீடு வாடகைக்குண்டு.

(நிறுவனங்கள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு: 1. 076 551 3820
2. 075 041 5867


## ஸ்மாட் அலைபேசி அராலியில் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 5

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி தெற்குப் பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பெறுமதியான அலைபேசி திருடப்பட்டுள்ளது என்று வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

குறித்த வீட்டில் வசித்து வரும் வயோதிபப் பெண் வெளியில் சென்ற சமயம் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படங்கள்: ஐ.சிவசாந்தன்

யாழ்ப்பாணம் - இருபாலை தென்கோவை கற்பகப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த மாதம் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (ய)



சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவத்தின் முத்தேர் பவனி முதலாம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றது. (ய-66)



புன்னாலைக்கட்டுவன்தெற்கு தாழையம்பதி பார்வதி சமேத அண்ண மகேஸ்வரர் ஆலய சோபகிருது வருட அலங்கார உற்சவத்தின் தேர்த் திருவிழா 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ய-66)

## விழிப்புணர்வு



மே30 முதல் ஜூன்05 வரையான சுற்றுச் சூழல் வாரத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்துக்கு முன்பாக சமூகத்தில் பரவலாகக் காணப்படும் “பிளாஸ்ரிக் பொருள்களின் பயன்பாடுகளும் அதன் பாதக விளைவுகள் தொடர்பாகவும்” வெளிப்படுத்தும் வகையில் ‘மாற்றம்’ எனும் விடயத் தலைப்பில் விழிப்புணர்வுத் தெருவெளி யாற்றுகை கடந்த 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது. (ய-66)

## மரநடுகை

மே30ஆம் திகதி முதல் ஜூன் 05ஆம் திகதி வரையான சுற்றுச்சூழல் வாரத்தை முன்னிட்டு மரநடுகை நிகழ்வு உடுவில் பிரதேச செயலக வளாகத்தில் கடந்த முதலாம் திகதி வியாழக் கிழமை இடம் பெற்றது. (ய-66)





பச்சிலைப்பள்ளி சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் “புகைத்தலில் இருந்து மீண்டதோர் நாடு மகிழ்ச்சி நிறைந்த புதியதோர் கிராமம்” எனும் தொனிப்பொருளில் சர்வதேச புகைத்தல் மற்றும் போதை ஒழிப்பு தினம் மற்றும் உண்டியல் வழங்கும் நிகழ்வு கடந்த 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (ய-9)



சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி நிலையத்தில் கல்வி கற்று, முதலாவது பொறியியலாளராக பட்டம்பெற்றுள்ள பன்னீர்செல்வம் டிலக்சனா என்ற மாணவி மேற்படி கல்வி நிலையத்தில் வைத்து கடந்த 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தின் பிரபல கணிதபாட ஆசிரியரும் வி.சி.எம். கல்வி நிறுவன இயக்குநருமான பாலசிங்கம் ரவீந்திரனால் கௌரவிக்கப்பட்டார். (ய-125)



யாழ்ப்பாணம் உடுவில் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க புலமைப்பரீட்சையில் தோற்றுவதற்கான பயிற்சி வினாத்தாள்கள், மிட்ரோ லான் மீடியா சார்னத்தின் இலங்கைக்கான பிரதிநிதி லயன் கலாநிதி நா.தனேந்திரன், சற்குருநாதன் ஜோசப் மற்றும் ஜோமன் பிரதிநிதி நவரத்தினம் ஆகியோரால் அதிபரிடம் கையளிக்கப்பட்டது. (சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தென்மராட்சி பிக் பாஷ் லீக் (ரி.பி.பி.எல்.)

# பரபரப்புக்கு பஞ்சமில்லாத ஆறாம் நாள் ஆட்டங்கள்!

யாழ்ப்பாணம், ஜூன் 5

உதயன் ஊடக அனுசரணையுடன் பிரமாண்டமாக நடத்தப்படும் ரி.பி.பி.எல். (T.B.B.L. Thenmaradchi Big Bash League) தொடரின் ஆறாவது நாள் ஆட்டங்கள் நேற்று வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இந்த தொடரில் 10 அணிகள் பங்குபற்றுகின்றன.

நேற்று நடந்த ஆட்டம் ஒன்றில் மட்டுவில் பைற்றர்ஸ் அணியும், நுணாவில் டோமினேற்றர்ஸ் அணியும் மோதின. அதில் நுணாவில் டோமினேற்றர்ஸ் அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் பைற்றர்ஸ் அணி 9.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக விநோதன் 22 ஓட்டங்களையும், கோபினாத் 15 ஓட்டங்களையும், மதுசன் 12 ஓட்டங்களையும் பெற்றனர். நுணாவில் டோமினேற்றர்ஸ் அணி சார்பாகப் பந்துவீச்சில் ஜதுர்சன் 4 விக்கெட்டுக்களையும், ஜீவிதன் 2 விக்கெட்டுக்களையும், தமிழ்நேசன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நுணாவில் டோமினேற்றர்ஸ் அணி 7.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் கைதடி சுப்பர் அணியும், சாவா மாஸ்டர்ஸ் அணியும் மோதின. அதில் கைதடி சுப்பர் அணி 20 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கைதடி சுப்பர் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக தமிழேந்தி 13 ஓட்டங்களையும், கௌசி மற்றும் கஜன் ஆகியோர் தலா 12 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாவா மாஸ்டர்ஸ் அணி 9.4 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 54 ஓட்டங்களைப் பெற்று 20 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அந்த அணி சார்பாக ஜெரார் 12 ஓட்டங்களையும், தசீந்தன் 11 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். மட்டுவில் சுப்பர் அணி சார்பாகப் பந்துவீச்சில் கஜன், கவிசன், சுஜீவன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.



மற்றொரு ஆட்டம் ஒன்றில் நுணாவில் டோமினேற்றர்ஸ் அணியும், நுணாவில் ரொக்கர்ஸ் அணியும் மோதின. அதில் நுணாவில் ரொக்கர்ஸ் அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நுணாவில் டோமினேற்றர்ஸ் அணி 9.1 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக பிரிந்தன் 23 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். நுணாவில் ரொக்கர்ஸ் அணி சார்பாகப் பந்துவீச்சில் மலவன் 3 விக்கெட்டுக்களையும், மதுராஜ் 2 விக்கெட்டுக்களையும், கௌசிகன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நுணாவில் ரொக்கர்ஸ் அணி 4.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 56 ஓட்டங்களைப் பெற்று 9 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் சாவா மாஸ்டர்ஸ் அணியும், மட்டுவில் பைற்றர்ஸ் அணியும் மோதின. அதில் சாவா மாஸ்டர்ஸ் அணி 40 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சாவா மாஸ்டர்ஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக தசீந்தன் 46 ஓட்டங்களையும், அபிசகன் 45 ஓட்டங்களையும், தர்சன் 9 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் பைற்றர்ஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 76 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அந்த அணி சார்பாக விநோதன் மற்றும் கோபிநாத் தலா 20 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர். சாவா மாஸ்டர்ஸ் அணி சார்பாகப் பந்துவீச்சில் பிரதீபன் மற்றும் தாரகன் தலா 2 விக்கெட்டுக்களையும், தனலோஜன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

மற்றொரு ஆட்டத்தில் நாவற்குழி பிக்வூற்றர்ஸ் அணியும், நுணாவில் ரொக்கர்ஸ் அணியும் மோதின. அதில் நுணாவில் ரொக்கர்ஸ் அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நாவற்குழி பிக்வூற்றர்ஸ் அணி 9.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக எட்வின் அதிகபட்சமாக 11 ஓட்டங்களைப் பெற்றார். நுணாவில் ரொக்கர்ஸ் அணி சார்பாகப் பந்துவீச்சில் கௌசிகன் 4 விக்கெட்டுக்களையும், மலவன் மற்றும் கௌசிகன் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நுணாவில் ரொக்கர்ஸ் அணி 7.1 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 54 ஓட்டங்களைப் பெற்று 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் மட்டுவில் பைற்றர்ஸ் அணியும், கைதடி சுப்பர் அணியும் மோதின. அதில் மட்டுவில் பைற்றர்ஸ் அணி 10 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் பைற்றர்ஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக கோபிநாத் 30 ஓட்டங்களையும், பார்த்தீபன் 24 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கைதடி சுப்பர் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 60 ஓட்டங்களைப் பெற்று 10 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அந்த அணி சார்பாக சுஜீவன் 22 ஓட்டங்களையும், கஜன் 20 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். மட்டுவில் பைற்றர்ஸ் அணி சார்பாகப் பந்துவீச்சில் மதுசன் 4 விக்கெட்டுக்களையும், மாதங்கன் மற்றும் துசிதன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.


மற்றொரு ஆட்டத்தில் நாவற்குழி பிக்வூற்றர்ஸ் அணியும், சாவா மாஸ்டர்ஸ் அணியும் மோதின. அதில் நாவற்குழி பிக்வூற்றர்ஸ் அணி 79 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நாவற்குழி பிக்வூற்றர்ஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 108 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக நிசாந்தன் 54 ஓட்டங்களையும், அஜந்தன் 47 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாவா மாஸ்டர்ஸ் அணி 9.2. பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 29 ஓட்டங்களை மட்டுமே பெற்று 79 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அந்த அணி சார்பாக தர்சன் அதிகபட்சமாக 10 ஓட்டங்களைப் பெற்றார். நாவற்குழி பிக்வூற்றர்ஸ் அணி சார்பாகப் பந்துவீச்சில் ராஜ்குமார் மற்றும் நிதர்சன் தலா 3 விக்கெட்டுக்களையும், எட்வின் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். (எ)


## மரண அறிவித்தல்

பிறப்பு
08 . 03 . 1999



இறப்பு
04 . 06 . 2023

### செல்வன் யேசுதாசன் ஜெனிங்ஸ் றெமில்ரன்

நவாலி கிழக்கு, மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் யேசுதாசன் ஜெனிங்ஸ் றெமில்ரன் நேற்று (04.06.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் திரு.திருமதி யேசுதாசன் (பாலன்) மேரி யோசேப்பின் (பவளம்) ஆகியோரின் அன்பு மகனும், ஜெனிங்ஸ் ஷரோன் ( ஆசிரியர்- யாழ்/ புனித பத்திரிசியார் கல்லூரி) அவர்களின் அன்புச் சகோதரனும், ஜெயராசா (France), றேமன் (France), மேர்வின் (Norway), நேசன், காலஞ்சென்ற செபமாலையம்மா, அருட்சகோதரி றொசிற்றா ( திருக்குடும்ப கன்னியர் மடம்- பண்டத்தரிப்பு), குருசுமுத்து திரேசம்மா ( தவம்- ஓய்வுபெற்ற ஆசிரியர்- யாழ்/ புனித பத்திரிசியார் கல்லூரி), யேந்தி (Canada) ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற அடைக்கலம், வெனோ, நாதன் (London), ஜெயம், ஜெயமணி (London) ஆகியோரின் அன்பு மருமகனும், அருட்தந்தை அருட்செல்வன் (பங்குத்தந்தை- உடுவில்) அவர்களின் உடன்பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்கத்திருப்பலி இன்று (05.06.2023) திங்கட்கிழமை நவாலி புனித பேதுரு பாவிலு ஆலயத்தில் பிற்பகல் 4 மணியளவில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் நவாலி புனித பேதுரு பாவிலு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு: 077 322 2755
076 558 1298

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிவாயுவின் விலை 452 ரூபா சரிவு

கொழும்பு, ஜூன் 5

லிட்ரோ எரிவாயு நிறுவனம் நேற்று நள்ளிரவு முதல் 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை 452 ரூபாவால் குறைத்துள்ளது. இதற்கமைய, 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 3 ஆயிரத்து 186 ரூபா ஆகும். அதேபோல், 5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டர் 181 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை ஆயிரத்து 281 ரூபாவாகும். 2.5 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 83 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 598 ரூபாவாகும் என லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

(அ-ஒ.இ)

## பாதுகாப்புப்...

இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள நிலையில் அதனை அமைச்சரவை ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

ஜனாதிபதியின் புதிய திட்டத்தின் கீழ்.பிரதிக் கூட்டுப்படைத் தளபதி என்ற பதவியும் உருவாக்கப்படும். இந்தப் பதவி எவ்வாறு உருவாக்கப்படும் என்ற விடயம் அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்படவில்லை.

கூட்டுப்படைத் தளபதி பாதுகாப்புச் செயலருடன் இணைந்து பணியாற்றி பாதுகாப்புப் படையினருக்கு மூலோபாய அறிவுறுத்தல்களை வழங்குவார். பாதுகாப்பு அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் பாதுகாப்புச் செயலருடன் இணைந்து கூட்டுப்படைத் தளபதி இலங்கையின் பாதுகாப்புப் படைகளின் எதிர்கால முன்னேற்றம் உட்பட பாதுகாப்பு மூலோபாயத்தை ஏற்படுத்துவார்.

ஆயுதப்படைகளின் திறன் எதிரிகளின் திறனுடன் ஒப்பிடுகையில் எவ்வாறு உள்ளது என்பது குறித்து முப்படைகளின் பிரதானி மதிப்பீடுகளை மேற்கொள்வார். ஆயுதப்படையினர் தொடர்பான அவசரநிலைத் திட்டங்களைத் தயாரித்து முப்படைகளின் பிரதானி அவற்றை மதிப்பிடுவார்.

ஆயுதப்படைகளின் ஒருங்கிணைந்த கூட்டுப்பயிற்சிக்கான கொள்கைகளை உருவாக்குவதல் முக்கியமான குறைப்பாடுகள் பற்றிய ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் பலம் பலவீனங்களை மதிப்பிடுதல் போன்றவற்றில் கூட்டுப்படைகளின் தளபதி ஈடுபடுவார்

என்று அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ.இ)

## பயங்கரவாதத்துக்கு...

வணிகச் செயற்பாடுகளை இலகுபடுத்துவது தொடர்பான மதிப்பீடுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்தல் போன்ற விடயங்கள் மீது நேரடியாகத் தாக்கம் செலுத்தும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நுவரெலியா கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்ற சட்டத்தரணிகள் மாநாட்டின் 2ஆம் நாள் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சட்டவிரோத பணப் பரிமாற்றம் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியுதவிகளை வழங்குவதைத் தடுப்பதற்காகக் காணப்படும் சட்டதிட்டங்களின் இடைவெளிகளை விரைவில் கண்டறிய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் இலங்கை மூலோபாயக் குறைபாடுகள் கொண்ட நாடாக பட்டியலிடப்படலாம் என்றும் அதனால் நாட்டின் அபிவிருத்திக்குப் பாதகமான விளைவுகள் ஏற்படலாம் என்றும் அறிவுறுத்தினார்.

தேசியக் கொள்கையொன்றின் கீழ் நாட்டை வழிநடத்திச் செல்ல வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தேசியக் கொள்கை வகுப்பதற்கான குழுவை நியமிக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தேசியக் கொள்கை வகுப்புச் செயற்பாடுகளின்போது அனைத்துத் தரப்பினரதும் இணக்கப்பாடுகளை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தாலும், மேற்படி விடயங்கள் குறித்து உடன்பாடு ஒன்றை உருவாக்கி அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான முனைப்புக்களை மேற்கொள்வதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னயை அரசாங்கங்கள் தேசியக் கொள்கை ஒன்றை வகுக்கத் தவறியதன் காரணமாகவே இன்றளவில் நாட்டின் பிரச்சினைகள் உக்கிரமடைந்துள்ளன - என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (அ-ஒ.இ)

## தன்னைப்...

தலைவரும் சூழலியலாளருமான பொ. ஐங்கரநேசன்.

ஆண்டுதோறும் சுற்றுச்சூழல் தினம் ஜுன் 5ஆம் திகதி - இன்று - உலகளாவிய ரீதியில் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்தத்தினத்தை முன்னிட்டு விடுத்திருக்கும் ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

எங்கு பார்த்தாலும் பிளாஸ்ரிக் மயமாகி வரும் உலகில் மனித உடலும் பிளாஸ்ரிக் மயமாகிக் கொண்டிருக்கிறது. காற்றிலும் நீரிலும் நிரம்பியுள்ள பிளாஸ்ரிக் நுண்துகள்கள் சுவாசத்தின் மூலமும் உணவின் மூலமும் மனித உடலினுள் நுழைந்து நுரையீரலிலும் உள் இழையங்களிலும் தேங்கி வருகிறது. இவ்வாறு வாரமொன்றுக்கு 5 கிராமளவு பிளாஸ்ரிக் நுண்துகள்கள் மனித உடலைச் சென்றடைந்து கொண்டிருப்பதாக மருத்துவ விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். பல நூறு இரசாயனங்களின் சேர்க்கையினாலான பிளாஸ்ரிக் நுண்துகள்கள் தொடர்பாக விழித்துக் கொள்ளாவிடில் சுவாசக் கோளாறுகள் முதல் புற்றுநோய்கள் வரை பல்வேறு விபரீதங்களை எதிர்கொள்ள நேரிடும்.

பிளாஸ்ரிக் மனித குலத்துக்குப் பெறுமதியான பல பயன்களைத் தந்துகொண்டிருந்தபோதும் கூடவே சீர்செய்ய முடியாத பல மோசமான பாதிப்புக்களையும் ஏற்படுத்தி வருகிறது. இயற்கைப் பொருள்கள் யாவும் காலவோட்டத்தில் உக்கிக் கரைந்துபோக, செயற்கைப் பிளாஸ்ரிக் மட்டும் அதன் பிரம்மாவான மனிதனிடம் சாகாவரம் வாங்கி வந்துள்ளது. காலன் இல்லாததால் கழிவுகளாக மலைபோலக் குவிந்து சூழலுக்குத் தாங்கொணாத உபாதைகளை ஏற்படுத்தி வருகிறது.

பிளாஸ்ரிக்கின் நல்லாட்சியைவிடச் சமநிலையைச் சீர்குலைத்து இயற்கையைச் சாகடிக்கும் அதன் வல்லாட்சியே மேலோங்கியுள்ளது. இதனாலேயே ஐக்கிய நாடுகள் சபை 2023 ஆம் ஆண்டின் சுற்றுச்சூழல் தினக் கவனக் குவிப்பாகப் பிளாஸ்ரிக் கருப்பொருளைத் தேர்வு செய்துள்ளது. முற்றுகையிட்டிருக்கும் பிளாஸ்டிக் கழிவுகளில் இருந்து எம்மையும், இயற்கையையும் உடனடியாக மீட்டெடுப்பது இலேசான தொன்றல்ல. எனினும், அதன் தாக்குதல்களின் வீரியத்தைக் குறைக்கவல்ல வியூகங்களையேனும் வகுக்கவேண்டிய கட்டாய நிலைக்கு இன்று நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

தேவையற்ற பிளாஸ்ரிக் பொருள்களை வாங்குவதைத் தவிர்ப்பது எம்முன்னால் உள்ள முதற்தெரிவாகும். இயன்றவரை நீண்டகாலம் பயன்படுத்துவது, கழிக்க முன்னர் இன்னொருமுறை பயன்படுமா என்று சிந்திப்பது, கழிவுகளில் இருந்து பிளாஸ்ரிக்கைப் பிரித்தெடுப்பது போன்ற கழிவு மேலாண்மைகளையும் கையில் எடுக்கவேண்டும் - என்று குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ.27)

## மொட்டுவின்...

ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மொட்டுக் கட்சியினர் எவரும் அமைச்சுப் பதவி வேண்டும் என்று ஜனாதிபதியின் காலில் விழவில்லை. அமைச்சுப் பதவியை யாருக்கு வழங்கவேண்டும், யாருக்கு வழங்கக்கூடாது என்று முடிவெடுக்க அவருக்கு முழு உரித்துண்டு. மொட்டுக் கட்சியால் தான் இந்த அரசாங்கம் இயங்கு நிலையில் உள்ளது. எனவே மொட்டுக் கட்சியினரைப் புறக்கணித்து இந்த அரசால் எதனையும் செய்யமுடியாது.

இந்த அரசாங்கம் மொட்டு அரசாங்கம் தான். மக்களாணை இன்னமும் இந்த அரசாங்கத்துக்குண்டு. எந்தத் தேர்தல் நடந்தாலும், அதை எமது கட்சி நிரூபித்துக்காட்டும் - என்றார். (அ-ஒ.22)

## பல்கலைக்கழக...

விதிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என அடையாளப்படுத்தப்பட்ட இரண்டாம் வருட மாணவர்கள் 16 பேருக்கும், மூன்றாம் வருட மாணவர்கள் 15 பேருக்கும் விசாரணைகள் முடிவுறும் வரை கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும், விடுதி உட்பட பல்கலைக்கழகத்தின் எந்தவொரு பகுதியினுள் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீட மாணவர்களின் 'மாகோஸ்' வார நிகழ்வுகள் கடந்த 31ஆம் திகதி புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில் கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர்களுக்கும், மூன்றாம் வருட மாணவர்களுக்கும் மோதலொன்று ஏற்பட்டது. இதனால் மூன்றாம் வருட மாணவன் ஒருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் தொடர்பிலான பூர்வாங்க விசாரணைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. விசாரணைகளின் முடிவில் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என அடையாளப்படுத்தப்பட்ட இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர்கள் 16 பேருக்கும், மூன்றாம் வருட மாணவர்கள் 15 பேருக்கும் முறையான விசாரணைகள் முடிவுறும் வரை உள்நுழைவுத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் அறிவித்துள்ளார்.

இதேநேரம், மோதல் சம்பவத்தையடுத்து முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மாணவர்களின் 'மாகோஸ்' வார நிகழ்வுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது. நான்கு வருட இடைவெளியின் பின்னர் இவ்வருடமே மாகோஸ் நிகழ்வுகள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.20,125)

## மஹிந்தவின்...

அவருக்கு அரசாங்கம் ஸ்டன்மோர் கிரசன்ட் வீட்டை வழங்கியுள்ளது. மலலசேகர மாவத்தை சத்தம் மிகுந்ததாகக் காணப்படுவதால் கோத்தாபய புதிய இடத்தைக் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.இ)

## கஜேந்திரகுமாருக்கு...

கப்படுமென பொதுப்பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த விவகாரம் தொடர்பில் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு, பொலிஸ்மா அதிபரிடம் பொதுப்பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பணித்துள்ளார்.

(அ-ஒ.இ)

## தேர்தலைப்...

என்று நுவரெலியா கிராண்ட் ஹொட்டலில் நடைபெற்ற தேசிய சட்ட மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கருத்துத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் விமல் வீரவன்ஸவிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தேர்தலைக் கண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அவர் தலைமையிலான மொட்டு அரசும் அஞ்சி ஓடுகின்றமை ஜனாதிபதியின் உரையிலிருந்து வெளிப்படையாகத் தெரிகின்றது. மக்களின் ஆணையை இழந்த அரசால் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றமுடியாது.

நிலையான அரசு ஒன்று இருந்தால் தான் நாட்டின் பொருளாதார வளர்ச்சி சமாந்தரநிலைக்கு வரும். எனவே தேர்தல் ஒன்று மிகவும் அவசியம். தேர்தல் மீது மக்களுக்கு அக்கறையில்லை என்று கூறிவிட்டு தேர்தலைப் பிற்போடுவது அப்பட்டமான ஜனநாயக மீறல் - என்றார். (அ-ஒ.22)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விபத்தில் குடும்பத்தலைவர் சாவு!

யாழ்ப்பாணம், ஜூன் 5

வட்டக்கச்சியில் ஏப்ரல் மாதம் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி ரவிச்சந்திரன் (வயது - 47) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வட்டக்கச்சி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் கடந்த ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி முச்சக்கரவண்டியை நிறுத்திவிட்டு முச்சக்கரவண்டிக்குள் இருந்துள்ளார். முச்சக்கரவண்டிக்கு முன்பாக மோட்டார் சைக்கிளும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. எதிர்திசையில் பயணித்த மகேந்திராகப் வாகனம், மோட்டார் சைக்கிளையும், முச்சக்கரவண்டியையும் மோதித்தள்ளியது. இதில் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ஒ-26)

## திறப்பு விழா

'சுப்பையா பொன்' ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட நோயாளர் காத்திருக்கும் மண்டபம் மற்றும் அமரர்கள் துரைசிங்கம் சிவபாக்கியம் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட வாகனத் தரிப்பிடத்தினதும் திறப்பு விழா இன்று மு.ப. 11 மணிக்கு, தொல்புரம் ஆரம்ப மருத்துவப் பிரிவு மண்டபத்தில் பொறுப்பு மருத்துவ அதிகாரி வி.குருபரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-இ)


## Hotel Vacancy

1 Room Boy
2.Cook Helper
3. Accounts Clerk
4. Receptionist
5.Maint. Supervisor

Contact: 076419 2934

(cs 50703) (N-1)


## விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி: 2 பில்லியன் ரூபா நிலுவையில்

கொழும்பு, ஜூலை 5

பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கு, 2 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிலுவைத் தொகை செலுத்தப்பட வேண்டியுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டு இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் அழகியல் பாடவிதானங்களின், செயன்முறைப் பரீட்சை மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கான முழுமையான கொடுப்பனவு இதுவரையில் வழங்கப்படவில்லை. இதனால் 2022 ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சையின் அழகியல் பாடவிதானங்களின் செயன்முறைப் பரீட்சை மதிப்பீட்டுப் பணிகளில் ஆசிரியர்கள் பங்கேற்பதில் தாக்கம் ஏற்பட்டுள்ளது என்றும் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - சாதாரண தரம், உயர்தரம் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சை ஆகியவற்றின் விடைத்தாள் மதிப்பீட்டுக் கொடுப்பனவாக 2 பில்லியன் ரூபாவுக்கும் அதிக தொகை வழங்கப்பட வேண்டியுள்ளது என்று ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். (எ-இ)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு.

* 16 அடி பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
* வட்டுக்கோட்டை மாவடி சந்தியிலிருந்து மூளாய் செல்லும் பிரதான வீதியில் இருந்து 200 m தூரத்தில். (உபவில் வீதி, பிரதான காபற் வீதி முகப்புடன்)
* யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் 786 வழி இலக்க தனியார் அரச பேரூந்துகள் செல்லும் வீதியில் இருந்து 200 m தூரம்.
* குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
* நன்னீர் ஊற்று நிலம்
* மாவடி சந்தியிலிருந்து 800 m தூரத்தில்.

தொடர்பு: 076 7390 413, 076 733 6093

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு.

* பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் வீதியில்.
* புத்தூர் பிரதான தண்ணீர் தாங்கி அருகாமையில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில். 18 அடி பாதையுடன்.
* ஒரு பரப்பின் விலை 120,000/= மட்டும்.

தொடர்பு: 076 733 6047, 076 7558 606.


# மரண அறிவித்தல்



தோற்றம் 11.11.1942

மறைவு 04.06.2023

## திருமதி கலாவதி கனகரத்தினம்

யாழ்ப்பாணம் அரியாலையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கலாவதி கனகரத்தினம் அவர்கள் நேற்று (04.06.2023) ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் யோகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் சரஸ்வதி தம்பதிகளின் மருமகளும், கனகரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஜெகன் மற்றும் சசி (நோர்வே), விஜி (நோர்வே), பாலன் (நோர்வே) ஆகியோரின் அன்புத்தாயாரும், சதாசிறிதரன், யாழினி ஆகியோரின் மாமியாரும், செந்தூரன், சதாசேயோன், மிதிலன், மஞ்சரி, சப்தகி, நர்த்தகி ஆகியோரின் பாசமிகு பேத்தியும், காலஞ்சென்றவர்களான யோகராசா, சுந்தரலிங்கம், கிருஷ்ணவேணி, ராஜலக்சுமி ஆகியோரின் சகோதரியும், அமரர் சத்தியானந்தன் (கிளி) அவர்களின் அண்ணியும் காலஞ்சென்றவர்களான தியாகராசா, கனகாம்பிகை (குஞ்சு) மற்றும் மேனகை, குணவதி ஆகியோரின் மைத்துனியும், கிரிஸ்ணா, சாந்தன், வசந்தி, குட்டி, சிவச்சந்திரன், சிவதர்சினி ஆகியோரின் மாமியாரும், பேபிரஜி, சுரேஸ், சுதா, சுகன்யா, சுதர்சன், சுகிர்தன் ஆகியோரின் சித்தியும், தமிழரசி, உதயன், அமரர் சிவக்குமார் ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2023) திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு "ஆறுபடைவீடு" இல.35, விபுலானந்தர் வீதி, அரியாலை இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
(ஒஸ்லோ, நோர்வே.)

தொடர்புகளுக்கு :

| | |
|---|---|
| பாலன் (மகன்) | : 00 94 (77) 255 2555, 00 47 966 66 666 (நோர்வே) |
| சசி (மகள்) | : 00 47 450 437 43 (நோர்வே) |
| சதா சிறிதரன் (மருமகன்) | : 00 94 (76) 418 6925 |
| விஜி (மகள்) | : 00 47 412 93 946 (நோர்வே) |

(CS 50706)(K-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.